முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி! அருட்பெருஞ்சோதி!! தனிப்பெருங்கருணை! அருட்பெருஞ்சோதி!!

ஆன்மீகத்தில் அரசியலையும், அரசியலில் ஆன்மீகத்தையும் கரை கண்டவர் முருகப்பெருமான்

**எதிர்காலம் குறித்த**

**இந்தியா, தமிழகத்தில் இந்த வார நிகழ்வாக எதிர்கால பலன் குறித்த**

**மகான் அகத்தியர் அருளிய வார ஆசி நூல்**

**பிலவ வருடம் கார்த்திகை மாதம் 19ம் திகதி முதல் கார்த்திகை மாதம் 26ம் திகதி வரை**

**(05.12.2021 ஞாயிறு முதல் 12.12.2021 ஞாயிறு வரை)**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

1. பிரணவ சக்தியே அரங்கா
   பேருலகில் உன்அவதாரம் மெச்சி
   தரணியில் இந்தியா தமிழகத்தில்
   தக்க பிலவ தேள் திங்கள்தன்னில்
2. தன்னிலே மூவாறோர்திகதி மேல் இருபானாற் திகதிவரை
   தக்க எதிர்கால பலன்குறித்த ஆசி
   இன்னாளில் அகத்தியனும் உரைப்பேன்
   இந்தியா தமிழகம் தன்னில்
3. தன்னிலே இயற்கை சீற்றமாகி
   தாக்கமும் பெருநகரமெல்லாம்
   இன்னலும் அழிவும் காணும்
   எங்கும் நீர்வளம் மிகுந்து
4. மிகுந்து கழனிக்கு பங்கம்
   மோசமானபடி பயிர்கள் நாசமும்
   தகுந்தபடி காப்பில்லா அழியும்
   தமிழக சோழஎல்லை பேரழிவு காணும்
5. காணுகின்ற இந்தநிலை மாற
   காப்பாக தமிழக அரசும்
   ஞானமுடன் பாதுகாப்பு நடவடிக்கை
   ஞானவான்களை கொண்டு நடத்த
6. நடத்தவே பேரிடரை வென்று
   நலிவிலா அழிவிலா மீளும்
   இடர்களையும் இந்த சேவையை
   இந்தியா தமிழகம் இணைந்து செயலாற்ற
7. செயலாற்ற இயற்கை வழி
   சீற்றங்களை வென்று நன்கு
   தயவுடன் பாதுகாப்பு கூடி
   தமிழகம் இந்தியா நிலைஉயரும்
8. உயர்வான பொருளாதார வழி
   உண்மைபட வளர்ச்சிக் காண
   தயவான ஆளுமைபுரிவதுடன்
   தாராள சிறுகுறுந் தொழில்கள்

9. தொழில்கள் வளர்ச்சிக் காண
தேவைகளை நிறைவேற்றிட
தொழில் வகை முதலீடுகள்தனை
தேசநலம் கருதி வளர்க்க

10. வளர்க்க இந்தியா தமிழகம்
வளர்ச்சித் திட்டங்கள் வழி
தளர்விலா உயர்ந்துநிற்கும்
தவராஜன் சேவையால் மாற்றம் பெறும்
வார ஆசி முற்றே

–சுபம்–